

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டம், எல்லக்கிராய் மலை கிராமத்தில். மலைவாழ் பகுதிகளில் வசிக்கும் அனைவருக்கும் ஹீமோகுளோபினோபதி நோய் கண்டறியும் பரிசோதனைகள் மற்றும் ரூ.40 கோடி மதிப்பீட்டில் உயிர் காக்கும் உயர் ரக மருந்துகள் வழங்கும் திட்டத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (30.05.2023) தொடங்கி வைத்தார். உடன் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கு.பொன்னுசாமி ஆகியோர் உள்ளனர்.

### ரூ.2000 நோட்டுகளை வாபஸ் பெற்றதால்

# இந்திய ரூபாய் மீதான நம்பகத்தன்மையில் சந்தேகம்!

## ஒன்றிய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் குற்றச்சாட்டு!



மும்பை, மே 31-

2000 ரூபாய் நோட்டுக்கள் அறிமுகம் மற்றும் திரும்பப் பெறும் நடவடிக்கையானது இந்திய ரூபாய் மீதான நேர்மை, நம்பகத்தன்மையில் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளதாக முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

2000 ரூபாய் நோட்டுக்களை திரும்ப பெறுவதாக சமீபத்தில் ஒன்றிய அரசு அறிவித்தது. இதனை காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் நிதியமைச்சருமான ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார். அவர் கூறுகையில், "முக்கிய பொருளாதார குறியீடுகள் கீழ் நோக்கி செல்கின்றன. பொருளாதாரம் உயர் வளர்ச்சிப்பாதையை எட்டும் என்ற நம்பிக்கை குறைவாக இருக்கிறது. மணிப்பூர் கலவர சம்பவத்தில் 75 உயிர்கள் பலியாகி உள்ளன. மணிப்பூரில் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

ஆனால் பிரதமர் ஏன் தொடர்ந்து மவுனம் காத்து வருகிறார். கடந்த ஒரு மாதமாக மல்யுத்த வீரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை எந்த ஒரு அமைச்சரும் சென்று சந்திக்கவில்லை. ஒரு எம்.பி.க்காக பதக்கம் வென்ற மல்யுத்த வீரர்களை 30 நாட்கள் போராட்டம் செய்ய ஏன் அனுமதிக்கிறீர்கள்? கடந்த ஒன்பது ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முற்றிலும் தோல்வியடைந்துள்ளது. அரசு தனது தவறுகளை சரி செய்து அனைத்து மக்களுக்காகவும் ஆட்சி செய்வதற்கு முயற்சி எடுக்கவில்லை. 2024ம் ஆண்டு பொது தேர்தலுக்கான கவுண்ட் டவுன் தொடங்கி விட்டது" என்றார்.

**மம்தா கருத்துக்கு ஆதரவு!**

நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சி வலுவாக உள்ள இடங்களில் அவர்களை மாநில கட்சிகள் ஆதரிக்க வேண்டும் என முதல்வர் மம்தா கூறியிருந்த நிலையில் முன்னாள் நிதிய மைச்சர் இதனை வரவேற்றுள்ளார். இது குறித்து ப.சிதம்பரம் கூறுகையில், 'முதல்வர் மம்தாவின் அறிக்கையை வரவேற்கிறேன். அவர் காங்கிரஸ் கட்சியுடனான பேச்சுவார்த்தையை முன்னெடுத்து செல்ல வேண்டும். பேச்சுவார்த்தை புரிதலை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

### மல்யுத்த வீராங்கனைகள் மீதான ஒன்றிய அரசின் தாக்குதல் சம்பவம்:-

# தூசு படிந்த செங்கோலில் முதல் நாளிலேயே மாசு படிந்து விட்டது!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, மே.31-

பாலியல் குற்றச்சாட்டில் சிக்கியுள்ள பா.ஜ.க. எம்.பி. மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மல்யுத்த வீராங்கனைகள் டெல்லியில் போராடி வருகின்றனர். அறவழி போராட்டத்தில் ஈடுபட்ட வீராங்கனைகளை கைது செய்து வலுக்கட்டாயமாக அகற்றுவது அராஜகம். தூசு படிந்த செங்கோலை எடுத்து வந்து கொடுத்த முதல் நாளிலேயே செங்கோலில் மாசு படிந்து விட்டது என 'தீக்கதிர்' நாளேடு 30.5.2023 தேதியிட்ட இதழில் 'தூசு படிந்த செங்கோலில் மாசு படிந்து விட்டது' என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.




அது வருமாறு:-

சனாதன கருத்தியல்வாதியும், மகாத்மா காந்தி படுகொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருமான சாவர்க்கர் பிறந்த நாளில் இந்திய நாடாளுமன்றத்தின் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் தலைவரான குடியரசுத் தலைவரையோ, மாநிலங்களவையை தலைமையேற்று நடத்தும் குடியரசுத் துணைத் தலைவரையோ அழைக்காமல் முடியாட்சிக் காலத்தின் பதவியேற்பு விழா போல பிரதமர் நரேந்திர மோடியை மட்டும் முன்னிறுத்தி இந்த விழா நடந்து முடிந்துள்ளது.

சோழர் கால பாரம்பரியம் என்று புனைந்துரைத்து, தமிழக சைவ மடாதிபதிகளை அழைத்து, செங்கோலை படைப்பு விழாவை நடத்தியுள்ளார் பிரதமர். இது தமிழர்களுக்கு கிடைத்த பெருமை என்று சிலர் பிதற்றுவது அர்த்தமற்றது. செங்கோல் அறத்தின் அடையாளம், நீதியின் குறியீடு என்றெல்லாம் சிலர் நீட்டி முழக்குகின்றனர். மன்னராட்சி கால பழக்கங்களை மக்களாட்சிக் காலத்தில் உயிர்ப்பிப்பது நாடாளுமன்ற ஜனநாயகத்தையும், மக்கள் உரிமையையும் இழிவுபடுத்துவதாகும்.

ஆனால், முன் வைக்கப்பட்ட எந்தவொரு கருத்துக்கும் ஒன்றிய அரசு செவி சாய்க்கவில்லை. கொண்டாட்ட கோலம், கண்டதே காட்சி என தானடித்த மூப்பாக தர்பார் நடத்தி முடித்துள்ளது ஒன்றிய அரசு.

நாடாளுமன்ற புதிய கட்டட திறப்பு விழா நாளில் இந்த நாட்டுக்கு பதக்கங்களால் பெருமை சேர்த்த மல்யுத்த வீராங்கனைகள் தலைநகர் தில்லியில் நடந்த போராட்டத்தின் போது அடித்து நொறுக்கப்பட்டுள்ளனர். ஆட்சி மாற்றத்தின் அடையாளமாக செங்கோல் எதுவும் பரிமாறிக் கொள்ளப்படவில்லை. பிரிட்டிஷ்ராரின் யூனியன் ஜாக் கொடி இறக்கப்பட்டு மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டதே விடுதலையின் துவக்கமாக இருந்தது. ஆனால் மல்யுத்த வீராங்கனைகளின் கைகளில் இருந்த மூவர்ணக் கொடியை காவல்துறையினர் பறித்து எறிந்துள்ளனர். இதுதான் ஜனநாயகத்திற்கு, தேசிய கொடிக்கு, நாட்டிற்கு பெருமை சேர்த்த வீராங்கனைகளுக்கு தருகிற மரியாதையா?

பாலியல் குற்றச்சாட்டில் சிக்கியுள்ள பா.ஜ.க. எம்.பி., பிரிஜ் பூஷன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தலைநகர் தில்லியில் விளையாட்டு வீராங்கனைகள் போராடி வருகிறார்கள். பல்வேறு தரப்பினர் அவர்களுக்கு ஆதரவு தருகின்றனர். பாலியல் குற்றவாளியை கைது செய்ய மறுக்கும் தில்லி காவல்துறை, அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட வீராங்கனைகளை கைது செய்து வலுக்கட்டாயமாக அகற்றுவது அராஜகம்.

நீதி வழுவா நெறிமுறையின்படி ஆள்பவர் போல மோடி செங்கோல் ஏந்த, மறுமுனையில் வீராங்கனைகள் மீது வன்முறை ஏவப்படுகிறது. ஒரு பாலியல் குற்றவாளி மீது நடவடிக்கை எடுக்குமாறு கோருவது குற்றமா? தூசுபடிந்த செங்கோலை எடுத்து வந்து கொடுத்த முதல் நாளிலேயே செங்கோலில் மாசு படிந்து விட்டதே.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அண்ணல் காந்தி பாடத்தை அகற்றி விட்டு

# சாவர்க்கர் பாடத்தைத் திணிக்கிறது தில்லி பல்கலைக் கழகம்!

## கல்விக் கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்!

புதுடெல்லி, மே 31-

தில்லி பல்கலைக்கழகம் பி.ஏ. (ஹானர்ஸ்) அரசியல் அறிவியல் பாடத் திட்டத்தின் ஐந்தாம் செமஸ்டரில் மகாத்மா காந்தி குறித்த பாடத்தை நீக்கி விட்டு இந்துத்துவா தலைவர் வி.டி. சாவர்க்கரைப் பற்றிய பாடத்தை திணிக்க முயற்சி மேற்கொண்டுள்ளதாக ஆசிரியர்கள் சனிக்கிழமை கூறினர். இனி மூன்று ஆண்டு பட்டப்படிப்பைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் காந்தியைப் பற்றி படிக்க மாட்டார்கள் என ஆசிரியர்கள் கூறினர்.

இதுதொடர்பான தீர்மானம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கல்விக் கவுன்சில் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது. இந்த நடவடிக்கை கல்வியை காவிமயமாக்கும் முயற்சி மட்டுமல்ல காந்தியையும் சாவர்க்கரையும் ஒப்பிடும் முயற்சி என ஆசிரியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட அகாடமி கவுன்சில் உறுப்பினர் அலோக் பாண்டே கூறுகையில், "முன்பு, ஐந்தாம் செமஸ்டரில் காந்தி குறித்த பாடமும், ஆறாம் செமஸ்டரில் அம்பேத்கர் பற்றிய பாடமும் இருந்தன. இப்போது, சாவர்க்கரைப் பற்றிய கட்டுரையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

காந்தியின் பாடத்தை நீக்கி விட்டு சாவர்க்கரை திணித்துள்ளனர். மூன்று ஆண்டு படிப்பைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் இனி காந்தியைப் பற்றிய பாடத்தை படிப்பதற்கு வாய்ப்பில்லை" என்றார்.

மேலும் அவர் கூறுகையில், "நிலைக் குழுவில் முன்மொழிந்த பாடத் திட்டத்தை எதிர்த்தேன், அவர்கள் காந்தி பற்றிய தாள் ஐந்தாம் பருவத்தில் இருந்து நீக்கப்படாது என்று உறுதியளித்தனர். ஆனால் இப்போது கல்விக் கவுன்சிலில், நிலைக்குழு கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வந்தனர் என்றார்.

நிர்வாகக் குழுவின் முன்னாள் உறுப்பினர் ராஜேஷ் ஜா, "காந்தி யின் கருத்துக்கள் நமது சுதந்திரப் போராட்டத்தின் கூட்டு நனவை பிரதி பலிக்கின்றன. அவரது தத்துவம் நல்ல அரசியல் மற்றும் நல்ல தனி நபர்களுக்காக நிற்கிறது. காந்தியின் சிந்தனைகளை மாணவர்கள் அறிந்து கொள்வதற்காக முதல், இரண்டாவது செமஸ்டர்களில் காந்தி தொடர்பான பாடத்தை வைக்க வேண்டுமென்றார்".

தேசியக் கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாகவே சாவர்க்கர் குறித்த பாடம் திணிக்கப்படுவதாக பேராசிரியர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். இருப்பினும் மகாத்மா காந்தி தொடர்பான பாடங்கள் ஏழாவது செமஸ்டரில் இடம் பெறும் என சப்பைக் கட்டு கட்டியுள்ளது தில்லி பல்கலைக் கழகம்.

### கோவை மாவட்டம், பேரூர்,

# பட்டீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ. 100 கோடி மதிப்பீட்டிலான நிலம் மீட்பு!

கோவை, மே.31-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி 29.05.2023 அன்று கோவை மாவட்டம், பேரூர், அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்பீட்டிலான நிலம் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கோவை, பேரூரில் பட்டீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமாக 17.96 ஏக்கர் பரப்பிலான நிலம் 11 நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. கோவை இணை ஆணையர் அவர்களின் சட்டப்பிரிவு 78ன் படியும், ஆணையரின் மேல்முறையீட்டு சீராய்வு மனு உத்தரவின்படியும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை அரசாணையின் படியும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தை மீட்க உத்தரவிடப்பட்டது.

அதனை தொடர்ந்து, கோவை மண்டல இணை ஆணையரின் நேரடி மேற்பார்வை மற்றும் உத்தரவின் படி கோவை உதவி ஆணையர் சி.கருணாநிதி முன்னிலையில் திருக்கோயில் உதவி ஆணையர் / செயல் அலுவலர், மண்டலத்திலுள்ள பிற திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் மற்றும் ஆய்வர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டது. இக்குழுவினர் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியுடன் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தினை மீட்டு திருக்கோயில் வசம் ஒப்படைத்தனர். மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.100 கோடியாகும்.

மேலும் மீட்கப்பட்ட நிலங்களில் தென்னை மற்றும் பாக்கு மரங்கள் தோப்பு அமைந்துள்ளது. இவையனைத்தும் பொது ஏலத்தின் மூலம் ஆண்டு குத்தகைக்கு விட்டு வருவாய் ஈட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வின்போது திருக்கோயில் உதவி ஆணையர்/ செயல் அலுவலர் திருமதி கே.விமலா, பேரூர் வருவாய் வட்டாட்சியர் திருமதி இந்துமதி, வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) சதீஷ், காவல்துறை துணை கண்காணிப்பாளர் ராஜபாண்டியன், திருக்கோயில் அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் இல்லா மாநிலமாக்க

# அனைத்துத்துறை அலுவலர்களுக்கான பயிற்சிப் பட்டறை!

## அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்தார்!

சென்னை, மே 31 -

தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க அனைத்து துறை அலுவலர்களுக்கான பயிற்சி பட்டறையை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் துவக்கி வைத்தார்.

குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றிடவும் மற்றும் தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் முறை இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 1986ம் வருட குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்த மாநில செயல் திட்டம், நிலையான இயக்க நடைமுறைகள் ஆகியவற்றை உருவாக்கி குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுதலில் தமிழ்நாடு அரசு பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழ்கின்றது. குழந்தைகளை வேலைக்கு அமர்த்து வோர் மீது தவிர சட்ட, அமலாக்கம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 01.04.2022 முதல் 30.04.2023 வரை 321 குழந்தைகள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட காலத்தில் 224 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.48,28,000/ அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில், பல்வேறு துறைகளின் பங்களிப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே தமிழ்நாடு அரசு, குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் பல்வேறு துறைகளுக்கும் பயனளிக்கக் கூடிய வகையில் மாநில அளவிலான பயிற்சிப் பட்டறையை நடத்திட ஆணை பிறப்பித்துள்ளது. அதனடிப்படையில், இன்று (30.05.2023) G.R.T. கிராண்ட் ஓட்டலில் பல்வேறு துறைகளுடன் மாநில அளவிலான பயிற்சி பட்டறை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் (இரயில்வே) திருமதி வே.வனிதா, பதிவாளர் / மாவட்ட நீதிபதி ட்டி.என். முரளிதரன், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் செந்தில்குமார், தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்கள், சட்ட அமலாக்க அலுவலர்கள், தொழிலாளர் துறையுடன் பங்களிப்பில் உள்ள அனைத்து துறைகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் வேலை யளிப்பவர் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருமங்கலம் முன்னாள் எம்.எல்.ஏ.

# ம.முத்துராமலிங்கம் சகோதரர் ம.மூர்த்தி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 31-

மதுரை தெற்கு மாவட்டம், திருமங்கலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், கழக மாநில விவசாய அணி இணைச் செயலாளருமான ம.முத்துராமலிங்கத்தின் சகோதரர் ம.மூர்த்தி அவர்கள் நேற்று (30.05.2023) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை, முன்னாள் எம்.எல்.ஏ. ம.முத்துராமலிங்கத்திற்கும் மற்றும் அன்னாரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துள்ளார்.

### கலைஞர்நகர் முன்னாள் பகுதிப் பிரதிநிதி

# கே.ஏ.மதியழகன் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி - நல உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

சென்னை, மே. 31

காஞ்சிபுரம் நகரக் கழக முன்னாள் பொறுப்பாளர் கே.ஜே.அகத்தியப்பனின் இரண்டாவது மகனும், சென்னை 127 (அ) வட்டம், கலைஞர்நகர் முன்னாள் பகுதிப் பிரதிநிதி, தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. சென்னை (தெற்கு) திட்டத் துணைச் செயலாளர் மற்றும் மின்வாரிய செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளோடு கழகப் பணியாற்றியவருமான கே.ஏ.மதியழகன் (மின்வாரிய பணி ஓய்வு) அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு அவரது இல்லத்தில் (ஜி1, பிருந்தாவன் ஷெல்டர்ஸ், 20, அய்யப்பா நகர், சின்மயா நகர், சென்னை) 1.6.2023 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து விருகம்பாக்கம் சாய் நகரில் உள்ள சேவா மந்திர் ஆதரவற்றோர் காப்பகத்தில் உள்ள முதியோர்களுக்கு மூன்று வேளை அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

நிகழ்வில் அமைச்சர் மா. சுப்பிரமணியன், ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. , தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், வட்டச் செயலாளர் எஸ்.மைக்கேல், பொ.லோகு எம்.சி. எஸ்.கே. பழனிச்சாமி, மு.ராசா, கே. பாலமுருகன், ஆர்.டி.நல்லேந்திரன், பி.காளிதாஸ், மு. தமிழ்ச்செல்வன், பா.சுரேஷ், எஸ்.வேலாயுதம், ஏ.கே.பாஸ்கரன், நா.மோகனசுந்தரம், செ.சுரேஷ்குமார், எஸ். மாலதி மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியினை உஷா மதியழகன், ஹாங்காங் சலங்கை டான்ஸ் அகாதெமி நிறுவனர் பாபு தேவி, ம.வெற்றிச்செல்வன், எழுத்தாளர், சின்னத்திரை இயக்குனர் கே.ஏ.ராஜபாண்டியன் ஆகியோர் ஏற்பாடு செய்துள்ளனர்.




திருவள்ளூர் மத்திய மாவட்டம், எல்லாபுரம் மத்திய ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் ஆயிலச்சேரியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஒன்றிய கழக செயலாளர் கோடுவெளி தங்கம் முரளி தலைமை வகித்தார். இதில் தாயகம் கவி எம்.எல்.ஏ., ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் கழக அரசின் சாதனைகளை எடுத்துக்கூறி சிறப்புரையாற்றினர். இதில் மாநில, மாவட்ட, கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வி.சுரேஷ் நன்றி கூறினார்.

### அரசு திரைப்பட நிறுவனம் –

# மாணவர் சேர்க்கை 2023-2024 கால அவகாசம் நீட்டிப்பு!

சென்னை, மே.31-

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்கி வரும் ஒரே கல்வி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் திரைப்படத்துறை மற்றும் தொலைக்காட்சி துறையில் மிகச் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களையும், இயக்குநர்களையும் உருவாக்கி வரும் தனித்துவம் மிக்க நிறுவனமாகும்.

இந்நிறுவனத்தில், 2023 2024ஆம் கல்வி ஆண்டில் பின்வரும் பிரிவுகளில் பட்டப்படிப்பிற்கான முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கை தொடர்பான விண்ணப்பப் படிவங்களை 31.05.2023க்குள் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்யவும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 02.06.2023க்குள் சமர்ப்பிக்கவும் கேட்டுக் கொள்ளப்படட்டுள்ளது.

இளங்கலை காட்சிக்கலை ( ஒளிப்பதிவு)

இளங்கலை காட்சிக் கலை (எண்மிய இடைநிலை)

இளங்கலை காட்சிக்கலை (ஒலிப்பதிவு)

இளங்கலை காட்சிக் கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்)

இளங்கலை காட்சிக் கலை (படத்தொகுப்பு)

இளங்கலை காட்சிக் கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன்)

தற்போது, மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்வதற்கான கால அவகாசம் 15.06.2023 வரையிலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் 19.06.2023 வரையிலும் நீட்டிக்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை WWW.TN.GOV.IN எனும் இணையதம் வாயிலாக பதிவிறக்கம் செய்திடலாம் என்றும், மாணவர் சேர்க்கை தொடர்பான கூடுதல் விபரங்களை தகவல் தொகுப்பேட்டினை பார்த்து அறிந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாணவர்களின் நலன் கருதி நீட்டிக்கப்படும் கால அவகாசத்தினை கலை ஆர்வம் உள்ள அனைத்து மாணவ / மாணவியரும் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.




சென்னையில், நடைபெற்ற குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்து பல்வேறு துறை அலுவலர்களுக்கான ஒரு நாள் பயிற்சியினை நேற்று (30.05.2023) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வி. கணேசன் தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர்ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த் கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநர் (இரயில்வே) திருமதி வே வனிதா, பதிவாளர்/மாவட்ட நீதிபதி ட்டி.என். முரளிதரன், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் செந்தில்குமார், தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்கள், சட்ட அமலாக்க அலுவலர்கள், தொழிலாளர் துறையுடன் பங்களிப்பில் உள்ள அனைத்து துறைகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் வேலையளிப்பவர் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.